# ரெட் கிராஸ் குடும்ப வன்முறை நிதியுதவி திட்டம்

ஆஸ்திரேலியன் ரெட் கிராஸ் குடும்ப வன்முறை (FDV) நிதியுதவி திட்டம் தகுதி பெற்ற தற்காலிக விசா வைத்து இருப்பவர்கள் அல்லது உறுதியற்ற விசா உடையவர்கள் குடும்ப வன்முறையில் துன்பப்படுபவர்களுக்கு நிதியுதவி மற்றும் கேஸ் வொர்க் ஆதரவும் வழங்கப்படும்.

## கீழ்க்கண்ட அளவுகோள்கள் உடையவராக இருந்தால் தாங்கள் தகுதி பெறும் வாய்ப்பை பெறுவீர்.

1. ஆஸ்திரேலியன் குடியுரிமை மற்றும் நிரந்தர குடியுரிமை இல்லாதவராக இருக்க வேண்டும்.
2. குடும்ப வன்முறை துன்பங்களை அனுபவிப்பவராக இருக்க வேண்டும்.
3. பொருளாதார கஷ்டத்தில் உள்ளவராக இருக்க வேண்டும்.

## உதவியை எவ்வாறு பெறுவது?

www.redcross.org.au/familyviolencerelief என்ற இணையத்தளத்தில் மூலம் உதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்பினால் Red Cross on 1800 RED CROSS (1800 733 276) திங்கள் முதல் வெள்ளி வரை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம் அல்லது தொடர்பு கொள்ளலாம் அல்லது NAT_FDV_PILOT@redcross.org.au என்ற மின் அஞ்சல் மூலம் விண்ணப்பிக்கலாம்.

ரெட் கிராஸ் உடன் உள்ள உங்கள் தொடர்பு ரகசியமானது. தங்களுடைய விண்ணப்ப பாரத்தில் உள்ள தகவல்கள் யாவும் ரகசியமாக பாதுகாக்கப்படும்.

தங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால் 131 450ல் தொடர்பு கொண்டு விரும்பும் மொழியை தெரிவித்து 1800 733 276 என்ற எண்ணுடன்

தொடர்பு கொள்வதன் மூலம் மொழி பெயர்ப்பு மற்றும் விளக்கம் பெறும் சேவையை பெறலாம்.

## வாடிக்கையாளரை (Client ) எப்படி அடையாளம் காணுதல்

தற்சமயம் ஒரு நபர் FDV ஏஜென்சி அல்லது மற்ற ஏஜென்சி மூலம் உதவி பெறுபவராக இருந்தால் உடனடியாகவும் மற்றும் பாதுகாப்பான முறையிலும் ஒரு பரிந்துரை செய்வதற்கு இணையதளத்திற்கு சென்று பரிந்துரை பாரத்தை பூர்த்தி செய்து சுயமாக பதிவு செய்ய வாடிக்கையாளருக்கு உதவி செய்யலாம்.

## கூடுதல் உதவி கிடைக்கிறது

கீழ்க்கண்ட இலவச சேவைகள் மூலம் கூடுதல் உதவிகள் கிடைக்கும்.

1800 737 732 1800 RESPECT தேசிய பாலியல் வன்முறை மற்றும் குடும்ப வன்முறை ஹெல்ப் லைன்.

13 11 14 லைப் லைன் உதவி மற்றும் தற்கொலை தடுப்பு.

1800 55 1800 சிறார் ஹெல்ப் லைன்